International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

தருமபுரி மாவட்டத்தின் தெருக்கூத்துக் கலையும் பண்பாட்டுக் கட்டமைப்பும்

சி. பரமேஸ்வரன்
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை

ஆய்வுச் சுருக்கம்

"தருமபுரி மாவட்ட தெருக்கூத்துக் கலையும் பண்பாட்டுக் கட்டமைப்பும்" என்னும் தலைப்பிலான இக்கட்டுரையில், தெருக்கூத்துக் கலை எவ்வாறு தருமபுரி மாவட்டம் சார்ந்த எல்லைக்குட்பட்ட பண்பாட்டுக் கட்டமைப்பில் இன்றியமையாத கலையாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. தெருக்கூத்துக் கலையின் அடிப்படைக் கூறுகள் தருமபுரி மாவட்டம் சார்ந்த மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் வழிபாட்டுச் சடங்குகளிலும் இணைந்துள்ள தன்மைகளை அறிந்துகொள்வதோடு, தருமபுரி மாவட்டத்தில் வாழும் மக்களின் நம்பிக்கைகளும், நம்பிக்கை சார்ந்த சடங்குகளும் தெருக்கூத்து நிகழ்த்துதலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும் இக்கட்டுரை உணர்ந்துகொள்ளச் செய்கிறது.

முதன்மைச் சொற்கள்

தெருக்கூத்து, தருமபுரி, நிகழ்த்துநர், பார்வையாளர், ஒப்பனை, பண்பாடு.

ஆய்வு நோக்கம்

கலை ஒரு கருத்துப்பரிமாற்ற ஊடகமாக இருப்பதோடு, தான் வாழும் புறச்சூழல்களுடனான சமநிலையை உருவாக்கிக் கொள்ளும் ஆயுதமாகவும், தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான கருவியாகவும் பயன்பட்டதும்/பயன்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் தருமபுரி மாவட்டத்தில் தெருக்கூத்துக் கலை நிகழ்த்தப்படும் சூழல்களையும், சூழல்களுக்கு ஏற்ப நிகழ்த்தப்படும் தெருக்கூத்துப் பனுவலின் வகைகளையும் பண்பாட்டுக் கட்டமைப்பையும் ஆராய்வதோடு, அவற்றின் இன்றியமையாமையும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

கலை என்பது மனித சமூக சிந்தனை வளர்ச்சியின் அடையாளமாகும். வேட்டைச் சமூக சூழலைக் கடந்து வேளாண்மைச் சூழலில் ஒரு நிலையான குடியிருப்பு வாழ்க்கையை மேற்கொண்ட நிலையில், உருவான செழிப்பு நிலையினை அடிப்படையாகக் கொண்ட சிந்தனையின் உச்சமே கலையாக உருவெடுத்தது எனலாம். மனிதன் தான் வாழும் சமூகத்தோடு, தன்னுடைய வாழ்வியல் சூழலில் நிலவும் புறச்சூழல்களுடனான கருத்துப் பரிமாற்றத்திற்கு, குரல், அங்க அசைவுகளை பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவற்றைத் தொடர்ந்து எழுதிக் காட்டும் முயற்றியாக ஓவியக் கலை

உருவாகியுள்ளது. இவ்வாறான பல்வேறு பரிணாமங்களைத் தொடர்ந்து ஒரு கதையை எடுத்துக்கொண்டு கதாப்பாத்திரங்கள் அமைந்து நிகழ்த்துநர், பார்வையாளர், இசை, ஒப்பனை என்னும் நிகழ்த்துதல் கூறுகளோடு கலை நிகழ்த்தப்படுதல் மனித நாகரிகச் சமூக வரலாற்றின் உச்ச நிலை ஆகும். இத்தகைய நிலை தருமபுரி மாவட்டம் சார்ந்த மக்களிடையே தெருக்கூத்துக் கலையின் மூலம் எத்தகைய பண்பாட்டுக் கட்டமைப்புக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

கலையின் தோற்றம்

மனித சமூகம் தன் சிந்தனை வளர்ச்சிபெறத் தொடங்கிய காலம் முதலே வெவ்வேறு சூழ்நிலையில், வெவ்வேறு நிலையிலான வெளிப்பாட்டு வடிவங்களில் கலையை வெளிப்படுத்த தவறியதில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. கலையின் தோற்றத்திற்கான சூழலை விமர்சகர் இந்திரன் அவர்கள் வெளிப்படுத்தும்போது,

எளிமையாக கிராமத்து மக்களின் மகிழ்ச்சி கள், தேவைகள், பயங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றுடன் மக்கள் கலை நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. எனவேதான் அது வாழ்க்கையின் ஒரு தள்ள முடியாத ஒரு பகுதியாகி விட்டிருக்கிறது[1]

என்றும்,

மக்களின் கலைகளின் அடிநாதமாக இருக்கிற மக்கள் பண்பாடு, சமூகநிறுவனங்கள், பழக்க வழக்கங்கள், விழுமியங்கள் ஆகியவற்றால் இது கட்டப்பட்டுள்ளது. இக்கலைகளின் இலக்கணம் தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாகவும், சரியை, கிரியைகள் மூலமாகவும் கட்டமைக்கப்பட்டதாகும்.[2]

என்றும் குறிப்பிடுவதன் மூலம் கலை மக்களின் வாழ்க்கையிலிருந்தும், தங்களின் வாழ்முறை சார்ந்த விழுமியங்கள், நம்பிக்கை களின் மூலம் உருவாகி தலைமுறைதோறும் தேவைக்கேற்ப பரவலாக்கம் பெறுகிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

மனித சமூகத்தின் வாழ்நிலை பரிணாமங் களான தனிநபர் வாழ்கை, கூட்டுவாழ்க்கை என்னும் ஒவ்வொரு வாழ்நிலையிலும் தன்னுடைய வாழ்வின் நிகழ்வுகள், தான் எதிர்பார்க்கும் வாழ்நிலைகள், தன்னுடைய சிந்தையின் உருவாகும் வினாக்களுகான விடைகள் முதலானவற்றை நிகழ்த்துதல் வழியாக அதாவது ஒரு கதாப்பாத்திரத்தின் வழி நிறைவேற்றிக்கொளள முயற்சிசெய்ய எண்ணுகிறான். நிறைவேறிவிட்டதாக நம்பிக்கை கொள்கிறான். இத்தகைய கலை நிகழ்த்துதல் ஒரு பொழுதுபோக்கு அல்ல. தன்னுடைய நிறைவின்மைக் கூறுகளின் நிறைவேற்ற வெளிப்படாகும். இத்தகைய செயல்பாட்டின் தொடர்நிலைகளாக இன்றைய நிலையில், புத்தகம் படித்தல், இசையைக் கேட்டல், திரைப்படம் பார்த்தல், நாடகம் பார்த்தல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

தெருக்கூத்துக் கலையும் பல பரிமாணங்களும்

தெருக்கூத்துக் கலையின் பாணிகளை ஆய்வாளர்கள் பதிவு செய்யும் போது மேற்கத்திய பாணி என்று வரையறை செய்துள்ளார்கள். இதன்மூலம் தருமபுரி மாவட்டத்திற்கான நிலவியல் சார்ந்து தெருக் கூத்துப் பனுவல்கள் நிகழ்த்தப்படுவதும், இசை, ஒப்பனை முதலான நிகழ்த்துக் கலைக் கூறுகளில் வேறுபாடுகள் இருப்பதை யும் அறியமுடிகிறது.

தெருக்கூத்துக் கலையின் பல் பரிமாணங் களையும், இக்கலையின் இயக்கத்தையும் தெருக்கூத்து ஆய்வாளர் இராசரத்தினம் அவர்கள் பற்றி கூறும்போது,

கலைப்படைப்புகள் மனிதனின் அறிவு நுட்பத்தை, அனுபவத்தை புதிய சிந்தனையை, ஆளுமையை வெளிப்படுத்து வன. கலை, அறிவு, நுகர்வு, உணர்வு என்ற முத்திறன் நிறைந்த ஒன்று. கலைஞனும் உணர்வுப் பூங்காவில் உள்ளம் மகிழ் வெய்தும் போது கலை சிறப்பு பெறுகிறது[3]

என்று விளக்குவதன் மூலம் கலையும் கலைஞனும் ஒருங்கிணையும் நுட்பத்தைப் புரிந்துகொள்ளலாம். இவற்றோடு ஒரு சமூகத்திற்கு கலை என்பது எத்தகைய இன்றியமையாதது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

மேற்கண்ட விரிவான புரிதலின் மூலம் கலை உருவாக்கமும் நிகழ்த்துதலும் இன்றைய கால சூழலுக்கு மட்டுமே தேவைப்படுதல்ல, மனித சமூகத்தின் தொடக்ககால வாழ்நிலை யில் ஒரு அங்கமாகவே உருவாகியும், மனித சிந்தனைப் போக்கிலான வாழ்வின் மாறுதலுக்கு ஏற்ப கலையின் நிகழ்த்துதல்

உட்கூறுகளும் மாற்றமடைந்து, ஒவ்வொரு காலச்சூழலிலும் வாழ்ந்த மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் உட்பொதிந்த கருவுலமாக கலை இருந்திருப்பதையும் கலைகள் குறித்த வாய்மொழி மற்றும் எழுத்து வடிவப் பதிவுகள் உணர்த்தக் கூடியதாக உள்ளது.

தருமபுரி மாவட்டத் தெருக்கூத்து குழுக்கள் வரலாறு

தெருக்கூத்து ஆய்வாளர் இரத்தினம் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் நிகழ்த்தப்படும் தெருக்கூத்துக் கலையின் தொன்மை வரலாற்றை எடுத்துக்காட்டும்போது,

தருமபுரிமாவட்டத்தில் உள்ள தெருக்கூத்துக் குழுக்களில் முதல் இடம் பெறுவது பழைய தருமபுரி தெருக்கூத்துக்குழு. இதன் ஆசிரியர் (வாத்தியார்) நஞ்சுண்ட பூசாரி (கள ஆய்வு 14.02.2025). இவர் இக்குழுவை நடத்தி வந்திருக்கிறார். இவர் எழுதிய ஏட்டுச்சுவடி 'அருச்சுனன் தபசு' நாடகப் பிரதி ஆசிரியர் டி.வி.கண்ணனிடம் இருக்கிறது. பழைய தருமபுரி குழுவில் சடைய வாத்தியார் இடம் பெற்றிருந்தார். பழைய தருமபுரியில் இருந்த நாகரசம்பட்டி வந்த பின்னர் சடைய வாத்தியார் நாகரசம் பட்டியில் தனிக்குழு அமைத்து நடத்தி வந்தார். அடுத்து பெரியண்ண வாத்தியார் குழு, பெரியண்ண வாத்தியார் தென்னார்க் காடு மாவட்டம் வீடூரில் 'பாரததேவி நாடகச் சபாவில்" தெருக்கூத்து ஆடியவர். தருமபுரி மாவட்டத்திற்கு எல்லப்ப வாத்தியாருடன் அவரது குழுவிலேயே தெருக்கூத்து ஆட வந்த பெரியண்ணன் தனது 22ஆவது வயதில் தருமபுரி மாவட்டத்தில் தங்கி தெருக்கூத்து ஆடிவந்தார். அவர் தென்னார்க் காடு மாவட்டத்தில் 'அருச்சுனன் தபசு' ஆடுவதற்கும், இம்மாவட்டத்தில் 'அருச்சுனன் தபசு' ஆடுவதற்கும் வேறுபாடு உண்டு என்று கூறியதுடன், தருமபுரி பகுதி மக்கள் 'தடுக்குக் கட்டி' ஆடுவதை விரும்புகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்." பழைய தருமபுரி அருச்சுனன் பூசாரி கூறும்போது முன்பு எல்லாம் பத்து நாட்கள் தான் தெருக்கூத்து நடத்தினார்கள் என்றும் சில குறிப்பிட்ட நாடகங்கள் இரண்டு மூன்று நாட்கள் நடிக்கப் பட்டன என்றும் கூறுகிறார். பந்து நாட்களிலும் கீழ்க்கண்ட கூத்துகள் நடத்தப்பட்டன என்கிறார். மேலும்,

1. **ஆதிபர்வம் அல்லது பாண்டவர் பிறப்பு- 1நாள்**
2. **கிருஷ்ணன் பிறப்பு- 2 நாள்**
3. **வில் வளைப்பு -2நாள்**
4. **இராஜசுயயாகம்**
5. **திரௌபதி துகில்-2நாள்**
6. **குறவஞ்சி-1நாள்**
7. **அருச்சுனன் தபசு-1நாள்**
8. **அபிமன்யு சண்டை**
9. **கர்ணன் சண்டை-1நாள்**
10. **பதினெட்டாம் நாள் போர்-1நாள்**[4]

என்று பதிவு செய்கிறார்.

அருச்சுன பூசாரி 16 வயதில் நாடகம் நடிக்க ஆரம்பித்திருக்கிறார். நஞ்சப்ப பூசாரி இவருக்கு வாத்தியார். வயது 72. பெண் வேடம் போடுவார். மிருதங்கம் அடிப்பார் முத்துப்பட்டி (நாகரசம்பட்டி அருகில் உள்ள ஊர்). செட்டிப்பள்ளி, பாப்பாரப்பட்டி மாரரண்டஹள்ளி, கம்மாளப்பட்டி பென்னேஸ்வர மடம். பொன்னாகரம் தானப்பள்ளம், முத்துக்கவுண்டர், கொட்டாய் நாயக்கன்பள்ளி, அன்னசாகரம், கடத்தூர் போன்ற ஊர்களில் தெருக்கூத்தில் நடித்த தாகக் கூறுகிறார். கோட்டான் உட்கார்ந்த வீட்டில் வீட்டை 'அடைப்பு' போட்டு மூன்று மாதம் கழித்து அருச்சுனன் தபசு என்ற நாடகம் நடத்துவர் என்ற தகவலைத் தந்தார் (கள ஆய்வு 16.4.2025). மேலும் தருமபுரி மாவட்டத்தில் அன்னசாகரத்தில் தெருக்கூத்து ஒரு அணா டிக்கெட்டில் நடத்தப்பட்டதாக வும், தெருக்கூத்தை வீரப்ப வாத்தியார் குழுலினர் நடத்திய பொழுது அருசன பூசாரியிடம் உடன் சென்றவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பாத்திரத்தை முடிவு செய்து, அந்தம் பாத்திரத்தை உன்னிப்பாகக் கவனித்து பாடல்களையும் வசனங்களையும் மனப்பாடம் செய்து புதிய நாடகங்களைக் கற்றுக் கொண்ட செய்தியையும் தெரிவித்ததன் மூலம் கூத்துக் கலைஞர்கள் உருவாகும் முறையை அறிந்துகொள்ளலாம். மேலும்,

பெண்கள் தெருக்கூத்து ஆடுவதில்லை என்ற செய்திக்கு நேர்மாறாக மேச்சேரி

"பட்டம்மாள் என்ற பெண் தருமபுரி மாவட்டத்தில் டிக்கெட் நாடகம் நடத்திய செய்தி டி.வி. சுண்ணஸ் என்னும் ஆசிரியர் தெரிவிக்கிறார்." தெருக்கூத்தில் 'ஸ்பெசல்' நாட பாதிப்பு எவ்வளவு தூரம் இருந்தது என்று குறிப்பாகச் முடிவதில்லை. தெருக் கூத்தை நாடகம் என்று அழைப்பதும் தெருக்கூத்து அல்லாத பிற நாடகங்களை "நாவல்ஸ்" அழைக்கின்றனர்.[5]

என தருமபுரி மாவட்டத்தில் நிகழ்த்தப்படும் தெருக்கூத்து தொன்மை வரலாற்றை பழமை யான தெருக்கூத்துக் கலைஞர்களையும் குழுவினர்களையும் எடுத்துக்காட்டி ஆய்வாளர் இரத்தினம் அவர்கள் விளக்கியிருப்பதன் மூலம் தருமபுரி மாவட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்மைக் கலையாக தெருக்கூத்துக் கலை விளங்குவதை அறிந்துகொள்ளலாம்.

தருமபுரி மாவட்ட தெருக்கூத்து நிகழ்த்துதல் கூறுகள்

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தெருக் கூத்து நிகழ்த்துதல்கள் பல்வேறு காலம், இடம், வாழ்வியல் சார்ந்த வாழ்க்கைவட்டச் சடங்குகள் மற்றும் வழிபாட்டுச் சடங்குகள் என்னும் சூழல்களுக்கேற்ற கதைகளைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. திரௌபதி யம்மன் வழிபாட்டில் மூன்று நாட்கள் முதல் இருபத்தியோரு நாட்கள் வரையிலான கூத்துகள் நிகழ்த்தப்படுகிறது. வாழ்க்கை வட்டச் சடங்குகளில் திருமணத்திற்கு வில்வளைப்பு அல்லது திரௌபதி திருமணம், சுபத்திரை திருமணம், சுந்தரி மாலையிடு முதலான கூத்துகளும், குழந்தைப்பேறு வேண்டுதல் நிலையில் அருச்சுனன் தபசு கூத்தும், இறப்பு சார்ந்து ராஜசுய யாகம், கர்ணமோட்சம், வாலிமோட்சம் முதலான கூத்துகளும் நிகழ்த்தப்படுகிறது. ஆடி மாதத்தில் நிகழும் அம்மன் திருவிழாக்களில் மாரியம்மன் பிறப்பு, செல்லியம்மன் பிறப்பு முதலான அம்மன் தெய்வங்கள் சார்ந்த கதைகளை மையமாகக் கொண்ட கூத்துகள் நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதேப் போன்று புரட்டாசி மாதங்களில் திருமாலை மையமாகக் கொண்ட வெங்கடேச பெருமாள் கூத்தம், வன்னியர் இனத்தினர் தங்களுக்கான காமட்சியம்மன் என்னும் குல தெய்வத்திற்கான வழிபாட்டில் ஏழு நாட்கள் வரை வன்னிய புராணக் கூத்தை நிகழ்த் துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு தமிழக மக்களின் பண்பாட்டு வாழ்வியலோடு இணைந்துள்ள தெருக்கூத்து நிகழ்த்துதல் குறித்த புரிதலுக்கு தெருக் கூத்துப் பனுவல் குறித்தக் கதை மற்றும் பாடல்களோடு,

1. கூத்து நிகழ்த்துதலுக்கான அரங்கம்
2. ஒப்பனை
3. இசையும் அடவும்
4. தெருக்கூத்து நிகழ்த்துப் பாணிகள்

என்னும் அடிப்படைக் கூறுகள் குறித்தும் விளக்குவது இன்றியமையாததாகும்.

கூத்து நிகழ்த்துதலுக்கான அரங்கம்

தெருக்கூத்திற்கான அடிப்படைக் கூறுகளில் முதன்மையானது தெருக்கூத்து நிகழ்த்தும் அரங்கமாகும். அரங்கக் களம் மற்றும் அமைப்பு குறித்து நோக்கும்பொழுது, நிகழ்த்துநர்கள் அமர்ந்து ஒப்பனை செய்யக்கூடிய இடமாக தனிப்பட்ட நிலையில் இல்லாமல் தொடக்கத்தில் கோயில் அல்லது கோயில் சார்ந்த இடம், வீடு முதலான இடங்களில் ஒப்பனை செய்துகொண்டு பார்வையாளர்கள் மூன்று பக்கங்களில் அமர்ந்து காணும்முறையில் முச்சந்தி, நாற்சந்தி முதலான பொதுவெளியை மேடையாகக் கொண்டு கூத்து நிகழ்த்தினர். தற்பொழுதும் ஒப்பனை செய்வதற்கு முன்பு நிகழ்த்துனர்கள் இசைக்கருவிகளோடு சென்று வழிபட்டு வருவதை தொடக்கால முறையின் எச்சமாகக் கொள்ளலாம். தற்பொழுது, கூத்து நிகழ்த்தும் இடங்களிலேயே கூத்து கொட்டகை அமைத்து, ஒப்பனை செய்வதற்கான இடம், கூத்து நிகழ்த்துவதற்கான இடம் என பிரித்து அரங்கத்தை அமைக்கின்றனர். அரங்க வெளிச்சத்திற்காக எதிரில் இரண்டு கம்புகள் அமைத்து அதில் மின்விளக்குகள் பொருத்தி அரங்கத்தை வெளிச்சம் பெறச் செய்கின்றனர்.

ஒப்பனை

தெருக்கூத்து அடிப்படைக் கூறுகளில் ஒப்பனைக் குறித்து ஆராய்வது என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில் ஒரு கலைஞனை தன் முக ஒப்பனை மற்றும் பிற அணிகலன்கன்தான் மகாபாரத, இராமாயண,

புராண பாத்திரங்களாக உருமாற்றம் செய்கிறது. இத்தகைய உருமாற்றம் பார்வையாளனை இதிகாச காலத்திற்கும், அக்கால பாத்திரங்கஎளுடனான உரையாட லுக்கும் இட்டுச் செல்கிறது.

ஒப்பனையைப் பொறுத்தவரையில்,

1. முக ஒப்பனை
2. உடல் ஒப்பனை

என்ற இரு நிலைகளில் பதிவு செய்ய வேண்டியுள்ளது. ஒப்பனை என்பதன் இன்றியமையாமையை தெருக்கூத்த ஆய்வாளர் கோ.பழனி அவர்கள் விளக்கும் போது,

தெருக்கூத்தில் ஒப்பனை பலமான காரணியாகத் தொழிற்படுகிறது[6]

என்று ஒப்பனையின் இன்றியமையாமையைக் குறிப்பிடுகிறார். ஆய்வாளர் இரத்தினம் அவர்களும் தெருக்கூத்துக் கலையில் ஒப்பனை பற்றிக் கூறும்போது,

தலைமைப் பாத்திரம், துணைப்பாத்திரங்கள், பெண்பாத்திரங்கள், எதிர்நிலைப் பாத்திரங்கள், அறப்பாத்திரங்கள் என்று வேறுபடுத்திக் காண்பதற்குக் கதாப்பாத்திரங்களின் ஒப்பனைப் பயன்படுகிறது[7]

என்று குறிப்பிடுவதன் மூலம் ஒரு கலையில் ஒப்பனை என்பது எத்தகைய முக்கியத்துவம் பெறுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஆண், பெண் பாத்திரங்களுக்கான ஒப்பனை குறித்து அடையாளப்படுத்துவது இன்றியமை யாதது. ஆண்களுக்கான முகஒப்பனையைப் பொறுத்தவரையில் ஒரு பொது வண்ணத்தை முகம் முழுவதும் முதலில் வரையப்படும். இவை வேடத்திற்கேற்ற பொது வண்ணம் உள்ளது. இவ்வாறு பொதவண்ணம் பூசப் பட்டு, நெற்றியில் வைணவம், சைவம் முதலான குறிகள் வரையப்படுகின்றன. நெற்றியையடுத்து புருவங்கள் கோடுகளாலும் புள்ளிகளாலும் வரையப்படுகிறது. கண்க ளுக்கு கீழும்பட்டையான கோடுகள் வரையப் படுகின்றன. இவற்றோடு ஆண் பாத்திரங் களாக இருப்பின் மீசையைக் கட்டு மீசை, வரையும் மீசை என்னும் இரு நிலைகளில் அமைத்துக்கொள்கின்றனர். இவை முக ஒப்பனைக் குறித்த பொதுவானவையாகும்.

ஆண்பாத்திரங்களான தருமன், துரியோத னன், கர்ணன், இரணியன், பிரகலாதன், வீமன், அருச்சனன், நகுலன், சகாதேவன், கண்ணன், இராமன், இலட்சுமணன், வாதாபி, பரசுராமன், இடும்பன், மணிமாலன் முதலான பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு குணத்தையும் பண்பையும் உடையது. இந்நிலையில் அப்பண்புகளை உண்ர்த்தவ தாகத்தான் முக ஒப்பனை இருப்பது குறிப்பிடத்தக்கது. துடியான வீமன் பாத்திரம் கரும்பச்சை நிறமும், கண்ணன் பாத்திரம் நீல வண்ணத்தையும், பச்சை வண்ணம் பாண்டவர்கள், இராமன் உள்ளிட்ட பாத்திரங் களுக்கு பயன்படத்தப்படுகிறது. துச்சாதனன் உள்ளிட்ட துடியான வேடங்கள் சிவப்பு நிறத்தையும் பயன்படுத்தப்படுவது அந்தந்த பாத்திரங்கள் குறித்த தன்மையை உணர்த்து வதாக உள்ளது. இதேப் போன்று பெண் பாத்திரங்களான திரௌபதி, சுபத்திரை, பெருந்துரிவாள், சீதை முதலான பாத்திரங்கள் செந்தூரமும் வெளளையும் கலந்த சிவப்பு நிறத்தை பயன்படுத்துவத அந்தப் பாத்திரங் களுக்கான தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. முக வண்ணங்களைப் பார்த்தே பார்வையாளர்கள் வேடங்களை அறிந்து கொள்வர் என்பது முக ஒப்பனையின் சிறப்பை உணர்த்துவதாக உள்ளது.

முகஒப்பனையோடு அணியும் அணிகலன் கள் குறித்த ஒப்பனையும் முதன்மையானது. இந்நிலையில் தருமன், துரியோதனன் உள்ளிட்ட தலைமைப் பாத்திரங்கள் பெரிய கிரிடம் கண்ணாடிகள் பதிக்கப்பெற்று அணிதல், துச்சாதனன், அருச்சனன் உள்ளிட்ட துணைமை வேடங்கள் சிகிரியை தலையில் அணிதல், பலராமன், கண்ணன் உள்ளிட்ட பாத்திரங்கள் மயில் தோதையால் செய்யப்பட்ட கிரிடங்களை அணிதல் முதலானவை அந்தந்த பாத்திரங்களின் உயர்வை வெளிப்படுத்தவதாக உள்ளது. இவற்றோடு பாலமணி, காதுக்கட்டை, சுங்குக் கட்டு முதலான கொண்டையில் கட்டுகிற கட்டையெல்லாம் கட்டுவதோடு, புஜம், மார்பு பதக்கம், கைக் கட்டு, ஏழு சேலைகளால் செய்யப்பட்ட டவல், கஜ்ஜை முதலான அணிகலன் சார்ந்த ஒப்பனைகளும் வேடத்திற்கு இன்றியமையாததாகும். ஆண் வேடங்கள் அணியும் டவுல் வட்டாரம் சார்ந்து வேறுபடுதல் குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட வடக்கத்தி பாணியினர் 'மைகா' கொண்டு செய்யப்பட்ட டவுலைப் பயன்படுத்துகின்றனர். விழுப்புரம் உள்ளிட்ட தெற்கத்தி பாணியினர் சேலையா லான வட்டுடுப்பில் டவுல் அமைக்கின்றனர். கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட மேற்கத்தி பாணியில் நாவல்ஸ் என்னும் நாடக உடைகளைப் போன்று அழகிய வண்ணங் களால் செய்யப்பட்ட சுற்றுடுப்பு முலமான டவுள் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறான ஒப்பனைகள் அந்தந்த பாத்திரங் களின் தன்மையை உணர்த்துவதாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இசையும் அடவும்

தெருக்கூத்து நிகழ்த்துதல் கூறுகளில் இசை மற்றும் இசைக்கேற்ப ஆடப்படும் அடவுகள் குறித்தும் ஆராய வேண்டியது இன்றியமை யாதது. தெருக்கூத்துக் கலையில் மிருதங்கம், ஆர்மோனியம், முகவீணை, தாளம் முதலான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படு கின்றன. இத்தகைய இசைக் கருவிகள் நிலையிலும் பாணிகள் சார்ந்து வேறுபடுகிறது. தெற்கத்தி பாணியில் முகவீணை இல்லை. இதே போன்று ஆர்மோனியத்திற்குப் பதிலாக சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு மிருதங்கம், ஆர்மோனியம், முகவீணை, தாளம் முதலான இசைக்கருவிகள் பாடல் களின் ராகம் மற்றும் தாளத்திற்கு ஏற்ப வாசிக்கும் நிலையில் துச்சாதனன் உள்ளிட்ட துடியான பாத்திரங்கள் குத்தடவு, நெட்டடவு, சுற்றடவு முதலான நிலைகளில் அடவுகள் நிகழ்த்துவதும்,பெண்பாத்திரங்களும் சுற்றடவு முதலான அடவுகளை நிகழ்த்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தெருக்கூத்துக் கலையும் பண்பாட்டுக் கட்டமைப்பும்

தமிழ்ச் சமூகம் பன்முக பண்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்டதாகும். இந் நிலையில் ஒரு கலை நிகழ்த்துதல் என்பதும் தமிழ் நாட்டின் முழுமைக்கும் ஒரே நிலையிலானது அல்ல. அந்தந்த எல்லை சார்ந்த பழக்கவழக்கங்களையும் பண்பாடுக ளையும் உள்வாங்கி கலை நிகழ்த்தப் படுகிறது. இவ்வாறு நிகழ்த்தப்படும் தெருக் கூத்துப் பனுவல்களை,

- வாழ்க்கை வட்டச்சடங்குகளில் நிகழ்த்தப் படும் கூத்துப் பனுவல்கள்
- வழிபாட்டுச் சடங்குகளில் நிகழ்த்தப்படும் கூத்துப் பனுவல்கள்

எனும் இரு நிலைகளில் வைத்து ஆராயும்போது எவ்வாறு கலைகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட எல்லை சார்ந்த பண்பாடும், ஒரு குறிப்பிட்ட எல்லை சார்ந்த பண்பாட்டை கலை எவ்வாறு உள்வாங்கி நிகழ்த்தப் படுகிறது என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைவட்டச் சடங்குகளான திருமணம், குழந்தை பிறப்பு, இறப்பு முதலான வாழ்க்கை வட்டச்சடங்குகள் சார்ந்து இராஜசுய யாகம், கர்ணன் மோட்சம், அரிச்சந்திரா, பதினெட்டாம்போர், வாலிமோட்சம் முதலான கூத்துகளும், மரம் அல்லது வீட்டின் மீது இடி விழுந்தால் அருச்சுனன் தபசு கூத்தும் நிகழ்த்தப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் குலதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, திரௌபதியம்மன் வழிபாடு முதலான வழிபாட்டுச் சடங்குகளில் பாரதம், இராமாயணம், புராணம் சார்ந்த கூத்துகள் தெய்வத்தின் வரலாறு சார்ந்து நிகழ்த்தப்படுகிறது.

இத்தகைய கூத்து நிகழ்த்துகள் வெறும் நிகழ்த்துகளாக மட்டும் இல்லை. தருமபுரி மக்களின் நம்பிக்கைகள், விழுமியங்கள் முதலானவற்றை வெளிப்படுத்துவதாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் தருமபுரி மாவட்டத்தின் எல்லை சார்ந்த பண்பாட்டுக் கட்டமைப்பில் தெருக்கூத்து நிகழ்த்துதலின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்ளலாம்.

அடிக்குறிப்பு

1. இந்திரன், கலை ஓவியம்./ சிற்பம் பற்றிய கட்டுரைகள், ப. ப.50
2. மேலது.
3. இராசரத்தினம், தெருக்கூத்து, ப. 23.
4. இரத்தினம், தெருக்கூத்து, ப.30.
5. மேலுது, ப.32.
6. கோ.பழனி, தெருக்கூத்து பனுவலும் நிகழ்த்துதலும், ப. 45
7. இராசரத்தினம், தெருக்கூத்து, ப. 8.